2015 மார்ச் 31]

93—

தொழிற்பயிற்சி நிலையம்

***21996—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் புதியதாக அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், இருக்கையில் இல்லை. திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களுக்காக நான், மக்களால் நான்' என்ற தாரக மந்திரத்தோடு உலகத் தமிழ் மக்களின் ஒப்பற்ற தலைவியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில் இளைஞர்களுடைய நலனைக் கருதி ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். மேலும், என்னுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் திருப்புவனம், இளையான்குடி, மானாமதுரை ஆகிய ஏதாவது ஓர் இடத்தில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம், ஜமுனாமரத்தூரில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம், ஆக இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்கள் 553 இருக்கை வசதிகளோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, வந்தவாசி தொகுதியில் இரண்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மொத்தம் 252 இருக்கை வசதிகளோடு செயல்பட்டு வருகின்றன. அதிலே 21 இடங்கள் இந்த வருடம் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 15 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், மொத்தம் 2,474 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில் 63 இடங்கள் நிரப்பப்படாமல், காலியாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

முற்பகல் 10-15

அதேபோன்று, திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு பணிகளை நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதிக்கு தொழிற்பயிற்சி நிலையம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதுபோன்று, அனைத்து மாவட்டங்களிலும், தேவையான இடங்களிலே எல்லாம் செய்ய வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், 15 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் இந்த இரண்டு ஆண்டுகளிலேமாத்திரம் தமிழ்நாட்டிலே தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அந்த வகையில் இந்த 15 தொழிற்பயிற்சி நிலையங்களைத் தோற்றுவிப்பதற்காக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 90.93 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்திற்கும் தேவை இருக்குமேயானால், அதனைப் பரிசீலனை செய்து, தேவைக்கேற்ப தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

94—

சொந்தக் கட்டடம்

***51209—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.